**செ. கு. எண்: 42** **நாள்: 08.03.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே. பழனிசாமி**</u>
<u>அவர்களின் அறிக்கை – நாள் 8.3.2019</u>

1920–ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சாதிகார சட்டத்தை எதிர்த்து, பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் போராடினார்கள். அப்போராட்டத்தின்போது, அவர்களை அடக்கும் வகையில், அப்போதைய ஆங்கிலேய அரசு அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. அத்துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டதுடன், ஏராளமானோர் காயமடைந்தனர்.

அப்போராட்டத்தின் போது, ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடி தங்கள் இன்னுயிரை ஈந்த பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 பேர்களை கௌரவிக்கும் வகையிலும், அப்போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆவதை குறிக்கும் வகையிலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் ஒரு **நினைவு மண்டபம்** தமிழ்நாடு அரசால் கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**